[2002 அக்டோபர் 29

56—

ஆரம்ப சுகாதார நிலையம்

***15982—திரு. நா. சந்திரமோகன்.**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியை மையமாகக் கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள புதுப்பட்டினம் என்ற ஊராட்சி, கடற்கரையோரம் ஒட்டியுள்ள பகுதியாகும். அங்கு பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். புதுப்பட்டினம் ஊராட்சியைச் சுற்றிலும், தாண்டவன்குளம், கொடியம்பாளையம் மற்றும் புளியந்துறை ஊராட்சிகள் உள்ளன. இவற்றையும் சேர்த்து, மொத்த மக்கள்தொகை 30 ஆயிரத்திற்கும் மேல் உள்ளது. அங்கு வசிக்கிற மக்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டாலும் மற்றும் மகளிருக்குப் பிரசவ வலி ஏற்பட்டாலும், வேறு நோய்கள் ஏற்பட்டாலும், சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சீர்காழி சென்று மருத்துவம் பார்க்க வேண்டிய கஷ்டமான சூழ்நிலை உள்ளது. குறிப்பாக, கொடியம்பாளையம் என்ற ஊராட்சியில் 2000-க்கும் மேல் மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் இருக்கும் இடம்; 3 பக்கங்கள் கொள்ளிடம் ஆற்றாலும், ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்ட தீவில் மீனவர்கள் வசித்து வருகிறார்கள்.

2002 அக்டோபர் 29]

அவர்கள் மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால், கொள்ளிடம் ஆற்றில் படகு மூலமாக வந்து, கரை இறங்கிய பின்பு 13 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நல்லூர் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல், புதுப்பட்டினம், தாண்டவன்குளம், புளியந்துறை கிராம மக்கள், கொள்ளிடம் அல்லது நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவம் பார்க்கச் செல்ல வேண்டுமென்றால், கடற்கரையோரம் அருகிலுள்ள உப்பனாற்றில் படகு மூலமாகத்தான் கரையைக் கடந்து, அதன் பிறகு, மருத்துவம் பார்க்க சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக மகளிர், பிரசவம் பார்ப்பதற்கு மிகவும் கடினமான சூழ்நிலை உள்ளது. மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், எனது சீர்காழி தொகுதியிலுள்ள புதுப்பட்டினத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கும், அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஒன்றியத்தில் ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சந்திரமோகன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல், unserved and unreachable area-க்களுக்காகவே பிரத்தியேகமாக மருத்துவர், மருந்துகள், பரிசோதனை வசதி உட்பட அனைத்து வசதிகளுடன்கூடிய mobile dispensary—நடமாடும் மருந்தகங்கள்—அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, குறிப்பாக மீனவ சமுதாயம், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிகளுக்கு மருத்துவ வசதி கிடைக்கிற வகையில் இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த வகையிலே, புதுப்பட்டினத்தை மையமாகக் கொண்டு விரைவில் மருத்துவக் குழு அடங்கிய அந்த ஊர்திகள் அங்கு அனுப்பப்படும். வாரந்தோறும் தொடர்ந்து அந்தப் பகுதிகளுக்கு அந்த ஊர்தி சென்று,

அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துமாறு கேட்டு இருக்கிறார்கள். கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்த நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்று, விரைவிலே தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ நிலையமாக அங்கே ஏற்பட இருக்கிறது என்பதையும், அந்த மருத்துவ நிலையம் விரிவுபடுத்தப்படுகின்றபோது, எக்ஸ்-ரே வசதி, ஆபரேஷன் செய்கிற வசதி, ஆகிய அனைத்தும் அங்கே கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 57, திரு கே.கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

57—

கட்டடம்

***7724—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள முடுக்கன்குளம் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.